


ISBN 978-93-47021-22-0
9 789347 021220
TODAY PUBLICATIONS

தமிழர் வாழ்வியல் அன்றும் இன்றும்

# தமிழர் வாழ்வியல் அன்றும் இன்றும்

## (கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு)



தமிழ்த்துறை
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
கொரட்டூர் சென்னை -50

# தமிழர் வாழ்வியல்

## அன்றும் இன்றும்

தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் ச. வசந்தி**

**முனைவர் நி.நதியா**

**முனைவர் சு.சசிகலா**

**திருமதி. வி.சி.சித்ரா**

**டுடே பதிப்பகம்**

திருவல்லிக்கேணி

சென்னை – 600 005.

## நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **தமிழர் வாழ்வியல் அன்றும் இன்றும்** |
| தொகுப்பாசிரியர்கள் | : | முனைவர் ச. வசந்தி |
| | : | முனைவர் நி.நதியா |
| | : | முனைவர் சு.சசிகலா |
| | : | திருமதி. வி.சி.சித்ரா |
| உரிமை | : | தொகுப்பாசிரியர்கள் |
| பொருள் | : | ஆய்வுக்கட்டுரைகள் |
| பதிப்பு | : | பதிப்பு மார்ச்சு, 2026 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி<br>கொரட்டூர், சென்னை – 50. |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | 1/8, டெம்மி |
| அச்சகம் | : | டுடே பிரிண்டர்ஸ் சென்னை-5 |
| பக்கம் | : | 636 |
| விலை | : | ரூ 700/- |
| ISBN | : | 978-93-47021-22-0 |

(ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களின் பொறுப்புக்குரியவை)

**முனைவர் சி.கமலக்கண்ணன்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை-117

**முனைவர் நி.நதியா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பக்தவத்சலம் நினைவு மகளிர் கல்லூரி
கொரட்டூர், சென்னை-50

# தமிழர் பண்பாட்டில் இசை மரபு

# அன்றும் இன்றும்

உலகின் தொன்மையான மொழியாகவும் ஆதி நாகரீக சமுதாயத்தின் மொழியாகவும் திகழும் தமிழ் மொழியை முத்தமிழ் மொழி என்று பழம் பெறும் இலக்கியங்களும் அறிஞர்களும் அழைக்கின்றனர்.

இந்தியாவின் தென்பகுதியைத் தம் வாழ்விடமாக, கொண்டுள்ள தமிழ்ச் சமூகம் தொல்காப்பியர் காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பல கலைகளைக் கற்றுத் தெரிந்தவர்களாகத் திகழ்ந்ததை நமது சங்க இலக்கியங்களும் அதன் தொடர்ச்சியாக வந்த பிற்கால இலக்கியமான சிலப்பதிகாரமும் நமக்குச் சான்றாகத் திகழ்கிறது.

**"ஆடல் பாட லிசையே தமிழே**
**பண்ணே பாணி தூக்கே முடமே" (சிலம்பு 45-46)**

என்னும் வரிகள் முத்தமிழ் என்பதை எடுத்துரைக்கிறது.

சிலப்பதிகாரம் இதனை உறுதிப்படுத்தினாலும் சிலம்பு முழுவதுமே இசைக்குரிய மிகச் சிறந்த நூலாகத் திகழ்வதைத் தமிழர்கள் அறிவர்.

கள்வரின் ஈரமில்லா நெஞ்சையும் கனியச் செய்யும் தமிழிசையின் தொன்மை, ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது. சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், தொல்காப்பியமும், சிலப்பதிகாரமும் புலப்படுத்தும் இசைச் செய்திகள் தமிழிசையின் செழுமையும் வளத்தையும் வெளிப்படுத்துகின்றன. இயல், இசை, நாடகம் என்பதைச் சேர்த்து தமிழை முத்தமிழ் என்று அழைக்கின்ற வழக்கம் பழம் பெரும் புலவர்கள் இடத்திலே இருப்பதை நாம் அறிய முடிகிறது. முத்தமிழ் என்ற சொல்லே தமிழ் மொழியினுடைய சிறப்பை எடுத்துரைப்பதாக அமைந்திருக்கிறது.

இசையைப் பொழுதுப் போக்கிற்காகத் தமிழன் கருதவில்லை. இசைத் தமிழர் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களின் வாழ்வியலோடு இணைந்ததாக இருந்து வருகிறது. தாலாட்டாகத் தொடங்கும் இசை அடுத்து நலுங்குப் பாடல்கள், தெம்மாங்கு, அம்மானை, ஏலேலோ (தொழில் பாடல்) திருமணத்திற்கான மங்கல இசை, இறப்பின்போது பாடுகின்ற ஒப்பாரிப் பாடல் எனத் தமிழனுடைய வாழ்வின் தொடக்கம் முதல் முடிவு வரை இசையோடு வாழ்ந்த வாழ்வை இலக்கியங்கள் எடுத்துரைப்பதை நாம் காண்கின்றோம்.

மூன்று தமிழில் இன்று நாம் இசைத் தமிழைப் பற்றி ஆராய்ந்து பார்க்கும் பொழுது தமிழின் சிறப்பும் தமிழரின் அறிவின் உயர்வும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பண்பாட்டோடு அமைந்த தமிழனின் வாழ்வு இசையால் மேலும் சிறப்படைகிறது. பண்பட்ட எல்லா இனங்களிடையேயும் இசை இருந்ததை வரலாறு நமக்குத் தெரிவிக்கின்றது. காடுவாழ் மக்களிடையேயும் நாடோடி மக்களிடத்திலும் இசை ஒன்றாகக் கலந்திருந்ததை வரலாறுகள் நமக்குத் தெரிவிக்கிறது. பழங்குடி மக்களைப் பற்றிய வரலாறு நமக்கு எடுத்துரைக்கிறது. இசை மக்களின் பண்பட்ட மொழியாகத் திகழ்கிறது. மனித மனங்களை அல்லது மக்கள் கூட்டத்தைப் பண்படுத்தியது எது என்றால் அது இசையே. இசைக் காடுவாழ்ச் சமூகத்தின் ஆன்மாவாகத் திகழ்ந்தது என்றால் அது மிகையல்ல.

தமிழினத்தின் இசை மரபு மிகவும் பழமையானது. பழந்தமிழர் மிடற்றிசையிலும் கருவிசையிலும் சிறப்புற்றுத் திகழ்ந்ததைச் சங்க பாடல்கள் நமக்கு எடுத்துரைக்கிறது. தமிழ் மக்களின் வாழ்வோடு இணைந்த இசையைப் பற்றித் தொல்காப்பியரும் எடுத்துரைப்பதை நாம் பார்க்கலாம்.

**"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்" (தொல். 33)**

இயற்றமிழோடு இசையும் சிறந்திருந்தன குறிப்பிடுகிறார்.

நால்வகைப் பாக்களுக்கும் உரிய ஓசை வேறுபாடுகளைக் கூறுவதோடு பல்வேறு வண்ணங்களையும் அவர் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் வழி இசையைத் தமிழர்கள் குரல் இசை, நரம்பிசை இரண்டையும் அவர்கள் பயன்படுத்தியதை எடுத்துரைக்கிறார். நரம்புக் கருவி என்னும் பொழுது அவை யாழ் கருவியைக் குறிக்கிறது. சங்க இலக்கியங்களில் கருப்பொருளில் யாழையும் பறையையும் பயன்படுத்தியதைத் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார். அது மட்டுமல்லாமல் இந்த நூற்பாவின் முழு அளவிலான உள்ளடக்கத்தை நாம் பார்க்கும் பொழுது இசையின் நுட்பமான கூறுகளைப் பற்றி அவர் எடுத்துரைப்பதை அறிகின்றோம். வண்ணம் பற்றிய செய்திகளையும் அதில் இடம்பெற்று இருப்பதை நாம் கவனிக்கலாம்.

சங்க இலக்கியங்கள் வழி இசையைத் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகவே கருதினர் என்பதை அறிய முடிகிறது. ஐவகை நிலப் பாகுபாட்டில் தமிழர்களின் அந்த அந்த நிலப் பகுதிகளுக்கு ஏற்ப சிறப்புடைய தன்மையில் அமைந்த இசையை உருவாக்கி இசைத்து மகிழ்ந்து வந்தனர். அதற்குரிய இசைக்கருவிகளையும் அதற்குரிய பண்களையும் அவர்கள் உருவாக்கி தமது வாழ்வின் சிறப்பை அவர்கள் அனுபவித்து வந்தனர் எனலாம்.

**ஐவகை நிலப் பாகுபாடும் பண்களும்**

தமிழ் இலக்கியங்களில் ஐவகை நிலப் பாகுபாட்டை நாம் அறிவோம். அந்த ஐவகை நிலப் பகுப்பிற்குரிய பண்களைப் பற்றிய செய்திகளையும் நாம் சங்க இலக்கியத்தின் வழி அறிந்துகொள்கிறோம். முதல் நிலமான குறிஞ்சி நிலத்துக்குரிய பண் குறிஞ்சிப் பண் என்றும் பிறகு முல்லைப் பண், மருதப் பண், செவ்வழிப் பண், பாலைப் பண் என ஒவ்வொரு நிலத்திற்குரிய அதனுடைய தன்மைகளுக்கு ஏற்ப இசையின் தனித்துவத்தை உருவாக்கினர் நம் தமிழர்கள் என்பதை இதன் வழி அறியலாம்.

**பாணர்கள்**

இசைக்கலைஞர்களைப் பற்றிய பல செய்திகள் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. இசைக் கலைஞர்களைப் பற்றி முனைவர் ஆ.தட்ஷிணாமூர்த்தி பின்வருமாறு கூறுகிறார். "இசைக் கலைஞர்கள் பற்றி பல செய்திகளை அறிய முடிகிறது. இவர்கள் பாணர் எனப்பட்டனர் "பண்"என்பதன் அடியாகப் பிறந்தது இச்சொல்லாகும். மன்னர்களும் வள்ளல்களும் இவர்களைப் பெரிதும் பாராட்டி பரிசளித்தனர்."பாண்பசிப் பகைஞர்"என்று வள்ளல்கள் பாராட்டப்பட்டனர் சில வள்ளல்களைச் சார்ந்து பாணர்கள் இருந்துள்ளனர்."பாணர் பெருமகன்"என அவர்கள் புகழப்படுவர்." (ஆ தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகம் பண்பாடும், ப.221)

பண்பாடியதால் பாணர்கள் என அழைக்கப்பட்டனர் என்பதையும் பாணர்களை அழைத்த மரியாதைக்குரிய சிறப்புப் பெயர்களையும் நாம் அறிகிறோம்.

இலக்கியங்களில் பாணர், பாடினி, விறலி, கூத்தர் எனப் பல இசைக்கலைஞர்களின் பெயர்களைப் பற்றிப் பத்துப்பாட்டு பதிவு செய்கிறது. பாணர்கள் இசைப் பாணர்கள், யாழ்ப்பாணர்கள், மண்டைப் பாணர்கள் என மூன்று பிரிவாக இருந்ததைப் பற்றிய செய்திகள் பத்துப்பாட்டு நூல்கள் வழி அறிய முடிகிறது. இசைக் கருவின் வடிவத்தைக் கொண்டு இவ்வாறு அவர்கள் அழைக்கப்பட்டனர்.

அரசர்களையும் வள்ளல்களையும் நாடி இசைக் கலைஞர்கள் தமது கலைகளை நிகழ்த்திப் பரிசல் பெற்று தமது வாழ்வை நகர்த்தினர். அரசனது அரண்மனையிலும் திருவிழா காலங்களில் மக்களின் முன்னிலையிலும் இசைக் கலைஞர்கள் தமது கலையை நிகழ்த்திக் காட்டி மன்னர்களையும் மக்களையும் மகிழ்வித்தனர். இவர்களின் இசைத் திறமைக்காகவே இவர்கள் மதிக்கப்பட்டனர். தன்னை நாடி வந்த பாணர்களுக்குக் கரிகாலன் பொற்றாமரையைத் தலையில் சூடுவான் பொன்னெரி மாலையையும் முத்தாரமும் பாடினியர்க்கு அளிப்பான். யானை தந்து தான் செய்த கொடுஞ்சி என்னும் உறுப்பு அமைந்த பெரிய தேரில் பால்நிற குதிரைகள் நான்கினை பூட்டி பாணர்களை அதில் ஏற்றி விடை கொடுப்பான். பல ஊர்களையும் யனைகளையும் பரிசீலாகக் கொடுப்பான் என்கிறது பொருநராற்றுப்படை.

**"ஏரி அகைந்த அன்ன ஏடு இல் தாமரை**

**........ ...... ......... ...........**

**தரவு இடைத் தங்கள் ஓவு இளநீர்" (பொருநராற்றுப்படை: 159 -173)**

இவ்வரிகள் மூலம் இசைக்கலைஞர்களை அன்றைய சமுதாயம் எவ்வாறு போற்றி பாதுகாத்து அவர்களுக்குரிய சிறப்புகளோடு அவர்களை மதித்தனர் என்பதைப் பொருநராற்றுப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

இசைத் தமிழ் நூல்களாக பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் பல நூல்கள் இன்று கிடைக்கவில்லை. முதுநாரை, முதுகுருகு, சிற்றிசை, பேரிசைப் போன்ற இசை நூல்களைப் பற்றி இறையனார் பொருளுரைக் கூறுகிறது. மகிழிசை, நுண்ணிசை, உயிரிசை, ஆற்றிசைப் போன்ற இசை நூல்களைப் பற்றி யாப்பெருங்கல விருத்தியுரை கூறுகிறது. 'ஆசிரியமாலை' என்னும் இசை நூல் பற்றிச் சிலப்பதிகார அரும்பத விருதியுரை கூறுகிறது. பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், பரத சேனாதிபதியம், பஞ்சதாளப் பிரபந்தம், இசை நுணுக்கம், பஞ்ச மரபு போன்ற நூல்களைச் சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லாரின் உரை கூறுகிறது. மேலும் களரியாவிசை, தாளசமுத்திரம், சச்ச புடவெண்பா,

தாளவகையோத்து இசைத்தமிழ்ச் செய்யுட்டுரைக் கோவை போன்ற நூல்கள் பற்றியும் மேற்கண்ட நூல்கள் கூறுகின்றன. இவற்றுள் பஞ்ச மரபு என்னும் நூல் மட்டும் நமக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழர் வாழ்வில் இசையின் செழுமையைக் கூறும் நூல்களாக இன்று நமக்குக் கிடைத்தவை தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் தொல்காப்பியர் தமிழ் நிலங்களின் கருப்பொருள்களுள் ஒன்றாக யாழையும் பறையையும் வைத்தார். ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் உரிய பண்களை இலக்கண நூல் எடுத்துரைக்கிறது.

பழந்தமிழ் இலக்கியம் இசைச் சார்ந்தே வளர்ந்திருக்கிறது. தமிழ்ப் புலவர்கள் தான் கூற வந்த செய்தியைக் கலையாக ஆக்குவதற்குக் கவிதையைத்தான் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். தமிழரின் கவிதைகள் யாவும் இசையுடன் பாடுவதற்கு ஏற்ப தாள ஒழுங்குடன் அமைந்திருக்கிறது. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்னும் நான்கு வகை பாக்களில் அமைந்துள்ள பண்கள் எல்லாம் இசையுடன் மன்னர், மக்கள் முன்பு பாடப்பட்டு வந்திருக்கின்றன. அந்த மரபின் தொடர்ச்சியாக இன்றைய திரையிசைப் பாடல்கள் விளங்குகிறது எனலாம்.

சிலப்பதிகார காலம் தமிழிசையின் பொற்காலம் என்பதை பல சான்றுகளோடு பல அறிஞர்கள் நிறுவியுள்ளனர். பண்கள் தமிழிசையின் அடிப்படை என்பதையும் இன்று பண்கள் இன்றைய ராகங்கள் என்பதையும் அறிய முடிகிறது. சிலப்பதிகாரம் நூல் தமிழருடைய இசையினுடைய செழுமையையும் பண் பற்றிய நுணுக்கமான விவரங்களையும் பார்க்கும் பொழுது தமிழனின் இசையினுடைய வரலாறு அல்லது தமிழனின் பெருமை வாய்ந்த அறிவின் சிறப்பு நமக்கு விளங்குகிறது.

**முடிவுரை**

தமிழர் பண்பாட்டில் இசை மரபு மிகப் பழமையானதும் செழுமையானதும் ஆகும். தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் மற்றும் சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் நூல்கள் தமிழரின் இசை அறிவையும்

இசை மரபின் தொன்மையையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. ஐவகை நிலப் பாகுபாட்டிற்கேற்ப உருவாக்கப்பட்ட பண்கள், யாழ் போன்ற இசைக்கருவிகள், பாணர்கள் போன்ற இசைக் கலைஞர்கள் ஆகியவை தமிழிசையின் உயர்ந்த பண்பாட்டை எடுத்துரைக்கின்றன. மேலும் பிறப்பு முதல் இறப்பு வரை தமிழரின் வாழ்வியலோடு இசை இணைந்து இருந்ததை தாலாட்டு, தொழில் பாடல், திருமண இசை, ஒப்பாரி போன்ற மரபுகள் உணர்த்துகின்றன. இவ்வாறு தமிழர் வாழ்க்கை முறையிலும் பண்பாட்டிலும் இசை முக்கிய இடத்தை வகித்துள்ளது. எனவே, தொன்மையான தமிழிசை மரபு இன்றைய காலத்திலும் பல வடிவங்களில் தொடர்ந்து வளர்ந்து வருவது தமிழர் பண்பாட்டின் நிலைத்த பெருமையை வெளிப்படுத்துகிறது.